பக்கங்கள்:-13

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 04 | திங்கட்கிழமை | 21.10.2024 | அதிர்வு 80

## டென்மார்க் விபத்தில் தமிழர் ஒருவர் சாவு

டென்மார்க்கின் ஹோல்ட்ட் நகரில் அமைந்துள்ள Danish Crown இறைச்சிக் கூடத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற விபத்தில் தமிழர் ஒருவர் உயிரிழந்துள்ளார். அங்கு தூய்மைப்

06



### அரசியல்வாதிகள் மற்றும் ஏனையவர்களால்

# சட்டவிரோதமான முறையில் குவிக்கப்பட்ட சொத்துக்களை அரசுடமையாக்க நடவடிக்கை

இலங்கையில் அரசியல்வாதிகள் மற்றும் ஏனையவர்களால் முறையற்ற விதத்தில் சம்பாதிக்கப்பட்ட சொத்துக்களை அரசுடமையாக்குவதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று அரச தகவல்கள் கூறுகின்றன.

இதற்காகப் புதிய நிறுவனம் ஒன்றை அமைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்று அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

06



## 50 கோடி ரூபா கடனை இலங்கை மீளச் செலுத்த இந்தியா சலுகை!

### இந்த வாரம் அறிவிப்பு வரும்

இலங்கை அரசு இந்தியாவுக்கு வரும் வாரத்தில் திருப்பி செலுத்த வேண்டிய சுமார் ஐம்பதாயிரம் கோடி ரூபா கடனைச் செலுத்த முடியாமல் போய், இலங்கைக்கு மீண்டும் கெட்ட பெயர் வந்து விடாமல் இருப்பதற்காக அந்தக் கடனுக்கு முற்கூட்டியே சலுகைக் காலத்தை மேலதிகமாக அறிவித்து,

06




இடதுசாரி அணிப் பக்கத்திலிருந்து ஜனாதிபதி பதவிக்கு வந்திருப்பவர் அநுரகுமார திஸநாயக்க. அதனால், முதலாளித்துவப் பாதையிலான பிரபுத்துவ நடைமுறைகளை அடியோடு அவர் விரும்பாதவர்.

அந்தப் பண்பியல்பு காரணமாகத் தன்னை 'அதிமேதகு ஜனாதிபதி', 'மாண்புமிகு ஜனாதிபதி' என்றெல்லாம் சம்பிரதாயபூர்வமாக அழைப்பதை அவர் விரும்பவில்லை. அப்படி அவரை அழைப்பது அவருக்கு சங்கடங்களைத் தருவதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்களில் கூறப்படுகிறது.

பதவி நிலை கருதித் தம்ம. வெறுமனே 'ஜனாதிபதி' என்று அழைத்தால் போதும் எனத் தம்மைச் சூழவுள்ள அதிகாரிகளிடம் அவர் கூறியிருக்கின்றார் என்று சில செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வழமையாக இடதுசாரி அணிகளில் தலைவர்களை 'தோழர்' என்றே இயக்கத்தின்

06

# ஓட்டோ சாரதியிடமிருந்து ஓட்டோ, பணம் அபகரிப்பு

முல்லைத்தீவு – முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஓட்டோ சாரதி ஒருவரிடம் இருந்து ஓட்டோவும், 25 ஆயிரம் ரூபா பணமும் அபகரிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சாரதி பொலிஸாரிடம் வழங்கிய முறைப் பாட்டுக்கு அமைய சந்தேகநபர்களாக மூவர் அடையாளப் படுத்தப்பட்ட நிலையில், அவர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இருவர் தப்பிச் சென்ற நிலையில், முள்ளியவளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள னர்.

# வடக்கில் வீதிப்போக்குவரத்து பொலிஸ் இனிமேல் கண்காணிப்பு வளையத்தில்!

## எந்நேரமும் கண்காணிக்க விசேட திட்டம்



வடக்கு மாகாண வீதிப்போக்குவரத்து பொலிஸாரை அவர்களின் கடமை நேரத்தில் இறுக்கமாகக் கண்காணிக் கும் பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள் ளது.

தொழில்நுட்பத் திணைக்களத்தில் உதவியுடன், பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவால் சாவகச் சேரி பொலிஸ் நிலையத்தில் வைத்து இந்தத் திட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட் டது.

வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரின் நகர்வுகளை யும், செயற்பாடுகளையும் கண்காணிக்கும் விதமாகவும், சேவையைப் பரவலாக்கம் செய்யும் வகையிலும், கடமை நேரத் துஷ்பிரயோகங்களைத் தவிர்க்கும் வகையிலும் இந்தத் திட்டம் அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

வீதிக் கண்காணிப்புப் பொலிஸாரின் நகர்வுகள் மற்றும் அவர்களின் இட அமைவுகள் என்பவற்றை அலுவலகத்தில் அமர்ந்துகொண்டு திரையில் காணக்கூடியவாறு இந்தத் தொழில்நுட்பத் திட்டம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

போக்குவரத்துப் பொலிஸார் ஓர் இடத்திலேயே நீண்டநேரம் தரித்திருக்கின்றனர் என்றும், அவர்கள் வாகன நெருக்கடி மிகுந்த பகுதிகளில் சேவையில் ஈடுபடுவதில்லை என்றும் நீண்டகாலமாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர். எனவே, இந்த முறைப்பாட்டுக்கு நிரந்தரத் தீர்வைக் காணும் வகையில் இந்தத் திட்டம் அமையும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

# 10 லீற்றர் கசிப்புடன் யாழில் ஒருவர் கைது!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் சட்டவிரோத மதுபானத்துடன் சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊரெழு அம்மன் கோயிலுக்கு அருகில் வீடொன்றில் கசிப்பு விற்பனை இடம்பெறுகின்றது எனப் பொலிஸாருக்கு இரகசிய தகவலொன்று கிடைக்கப் பெற்றது.

இந்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத் துக்கு விரைந்த பொலிஸார் 10 லீற்றர் கசிப்பை மீட்டதுடன், அதனை விற்பனைக்கு வைத்திருந்த நபரையும் கைது செய்தனர்.

சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட நபரைக் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துப் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# பெண்ணிடமிருந்து சங்கிலி கொள்ளை



முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு பகுதியில் பெண்ணொ ருவரிடம் இருந்து தங்கச் சங்கிலியொன்று கொள்ளையி டப்பட்டுள்ளது.

மன்னாகண்டல் பகுதியில் குடும்பமாகப் பயணித்துக் கொண்டிருந்தபோதே, பிறிதொரு மோட்டார்சைக்கிளில் வந்த நபர் பெண்ணின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கி லியை அபகரித்துச் சென்றுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ள நிலை யில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண் டுள்ளனர்.

# கனடாவில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த குடும்பஸ்தர் பலி



கனடாவில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளங்குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மேற்படி துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் சிக்கி யாழ்ப்பாணம் மயிலிட்டியை சொந்த இடமாகவும் மார்க்கம், ஒன்ராறியோ, கனடாவில் வசித்து வந்தவருமான பஞ்சலிங்கம் பார்த்தீபன் (வயது-44) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கனடாவின் ஒன்ராறியோ மாநிலம் மார்க்கம் பகுதியில் உள்ள அவரது வீட்டு வாசலில் வைத்து நேற்று அதிகாலை இனம்தெரியாத நபர்களினால் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் போது, மேற்படி நபர் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் உயிருக்கு போராடியுள்ளார். இது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்திற்கு வந்து பார்த்த போது அவர் உயிரிழந்திருந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தவரின் சடலத்தை மீட்டு மேலதிக விசாரணைகளை பொலிசார் முன்னெடுத்துள்ளனர்.

முன்பகை காரணமாக இச்சம்பவம் இடம்பெற்றிருப்பதாக தெரியவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்தவர் மரணம்!


கிளிநொச்சி, வேரவில் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த நபர், சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.

பஞ்சாட்சரம் மவுதீஸ்வரன் (வயது 45) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 11ஆம் திகதி வேரவிலில் இருந்து முழங்காவிலுக்குச் செல்லும் வீதியில் மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட அவர், சிகிச்சையின்போது நேற்று (20) உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.



# அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை இடமாற்றம் செய்ய பொலிஸ் ஆணைக்குழு அனுமதி

அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை இடமாற்றம் செய்வதற்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தேர்தல் ஆணைக்குழுவின் விதிமுறைகளை பின்பற்றாமல் செயற்பட்டதால் தேர்தல் பணிகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் ஆணைக்குழுவிற்கு தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எதிர்வரும் தேர்தலுக்கு முன்னர் மேற்படி அதிகாரி மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் ஆணைக்குழுவிடம் தேர்தல் ஆணைக்குழு கோரிக்கை விடுத்திருந்தது.




# வீட்டுத்தோட்ட செய்கையை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை



நகரங்களிலுள்ள அனைத்து வீட்டு அலகுகளிலும் வீட்டுத்தோட்ட செய்கையை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குடும்பமொன்றுக்கு நாளாந்தம் தேவையான மரக்கறிகளை வீட்டுத் தோட்டங்கள் மூலம் உற்பத்தி செய்து கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக பிரதான நகரங்களை அடிப்படையாகக் கொண்டு 10,000 வீடுகளில் வீட்டுத்தோட்ட செய்கையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# யானை வேலிகளை அமைக்கும் பணி 80 வீதமளவில் நிறைவடைந்துள்ளது




நாடளாவிய ரீதியில் வனப்பாதுகாப்பு எல்லைகளை வரையறுத்து யானை வேலிகளை அமைக்கும் நடவடிக்கைகள் 80 சதவீதமளவில் நிறைவடைந்துள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுவரை 5500 கிலோ மீற்றர் உள்ளடங்கும் வகையில் யானை வேலி அமைக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் கூறியுள்ளது.

மேலும் 1500 கிலோ மீற்றருக்கான யானை வேலியை அமைக்கும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

யானை வேலி அமைக்கும் பணிகள் நிறைவடைந்தவுடன், அவற்றை பராமரிப்பதற்காக சிவில் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டோரை ஈடுபடுத்தவுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், சட்டவிரோதமான முறையில் யானை வேலிகளை அமைத்துள்ளவர்களை இணங்கண்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கவுள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# விரைவில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தேர்தல் ஆணையாளர் நாயகம் தகவல்



நாடாளுமன்றத் தேர்தல் நிறைவடைந்து 35 முதல் 40 நாட்களுக்குள் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடத்தப்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கமைய நாடாளுமன்றத் தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடத்தப்படும் எனவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

# கடந்த 10 வருடங்களில் மாத்திரம் 352,000 தென்னை மரங்கள் அழிப்பு



கடந்த 10 வருடங்களில் மாத்திரம் குருநாகல் மாவட்டத்தில் சுமார் 352,000 தென்னை மரங்கள் வெட்டப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகத்தின் முன்னாள் செயலாளர் பத்மகாந்த வந்துராகல இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், 30 வருடங்களுக்கு முன்னர் குருநாகல் மாவட்டத்தில் 300,000 ஏக்கர் தென்னைகள் இருந்ததாகவும், தற்போது 93,000 ஏக்கர் தென்னைகள் மாத்திரமே உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் 200,00 இற்கும் அதிகமான தென்னை மரங்கள் வெட்டி அழிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கட்டளையை மீறி பயணித்த லொறி மீது துப்பாக்கிச் சூடு



காலி – உடுகமவில் கட்டளையை மீறி பயணித்த லொறி மீது பொலிஸாரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கால்நடைகளை ஏற்றிச்சென்ற மேற்படி லொறியை வீதித்தடையில் நிறுத்துமாறு கட்டளையிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், லொறியை நிறுத்தாத காரணத்தால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர். சம்பவத்தில் எவருக்கும் காயமேற்படவில்லை.

இந்த சம்பவம் தொடர்பில் லொறி சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

# மிதிலைச்செல்வியின் துண்டுப்பிரசுரத்தை கிழித்து அநாகரிகமாக நடந்த அர்ச்சுனா!

## தமிழ் மக்கள் கூட்டணி கடும் கண்டனம்

(பிரபாகரன் டிலக்சன்)

தமிழ் மக்கள் கூட்டணியின் பெண் வேட்பாளர் மிதிலைச் செல்வியின் தேர்தல் துண்டுப்பிரசுரத்தைச் சுயேச்சைக் குழு வேட்பாளரான வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா கிழித்து அநாகரிகமாக நடந்து கொண்டதோடு அதனை முகநூலில் காணொளியாகவும் பதிவிட்டுள்ளார். இதற்குப் பலரும் தமது கண்டனங்களை வெளியிட்டு வருகின்றனர்.

இந்நிலையில், தமிழ் மக்கள் கூட்டணியின் சக வேட்பாளர் வரதராஜன் பார்த்தீபன் இந்தச் செயலுக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் முகநூலிலே பதிவு ஒன்றையும் அவர் இட்டுள்ளார்.

அந்தப் பதிவில்,

"பெண்கள் தேர்தல் அரசியலுக்கு வரவேண்டும், பெண்களுக்கான ஒதுக்கீடுகள் 50 சதவீதம் வரை அதிகரிக்கப்பட வேண்டும் என்று பெண்களுக்கான உரிமைக் குரல்கள் அனைத்துத் தரப்பினராலும் வலியுறுத்தப்படுகின்ற இந்தக் காலத்தில், தமிழ் மக்கள் கூட்டணியின் பெண் வேட்பாளர் மிதிலைச்செல்வி தனது தேர்தல் பரப்புரையின்போது வைத்தியர் அர்ச்சுனாவுக்கு வழங்கிய துண்டுப்பிரசுரத்தை வைத்தியர் அர்ச்சுனா தனது திருவாயையும், தன்னுடைய சாப்பாட்டுக் கோப்பையையும் துடைக்கின்ற காணொளியை அவரே தன்னுடைய முகப்பு பக்கத்தில் ஒளிபரப்புச் செய்து வழமை போல் தனது பண்புகளையும் வக்கிரத்தைக்



காட்டியுள்ளார்.

இது மிகவும் கண்டிக்கத்தக்கது. தன்னை ஒரு மேதாவியாகவும் தானே அநீதிகளுக்கு எதிராகக் கிளர்ந்திருக்கின்ற ஒரு பெரும் சக்தியாகவும் காட்டிக்கொள்ள முயற்சிக்கின்ற அர்ச்சுனா புரிந்த இந்தச் செயலானது நீதியானதா?

தேர்தலில் போட்டியிடுகின்ற ஒரு பெண் வேட்பாளர் அவமதிக்கப்பட்ட இந்த விடயம் தொடர்பில் பெண் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கின்ற அதேநேரம் பெண்கள் தேர்தல் அரசியலுக்கு வர வேண்டும் என்று வலியுறுத்துகின்ற பெண்கள்சார் சமூக மட்ட அமைப்புகள் மற்றும் நிறுவனங்களின் எடுக்கப் போகின்ற நடவடிக்கைகள் என்ன?" – என்று பதிவிட்டுள்ளார்.

---

### இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சகோதரத்துவ உரிமையை வலுப்படுத்தும் விதத்தில் அழைப்பார்கள். அந்த வகையில் இப்போது அவரின் தேசிய மக்கள் சக்தி செயற்பாட்டாளர்கள் அவரை 'ஜனாதிபதித் தோழர்' என்று அழைக்கின்றனர் என்று அந்தச் செய்தி வட்டாரங்கள் குறிப்பிட்டன.

அது மாத்திரமல்லாமல் ஜனாதிபதிக்குரிய பந்தாக்கள், சிறப்பு சலுகைகளை இயன்ற அளவு அவர் தவிர்த்து வருகிறார் என்றும் கூறப்படுகின்றது.

அவர், பொதுத்தேர்தல் 14ஆம் திகதி நடப்பதற்கு நான்கு, ஐந்து நாள்களுக்கு முன்னர் வடக்கே யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பகுதிகளுக்கு ஜனாதிபதி பதவியேற்ற பின்னர் முதல் தடவையாக வருகை தர இருக்கின்றார் எனச் செய்திகள் வெளியாகி உள்ளன.

வடக்கில் பொதுமக்களை சந்தித்து உரையாற்றும்போது இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தனது திட்டங்களின் அடிப்படைகளை தேர்தலுக்கு முன்னர் அவர் வெளியிடக் கூடும் என்று சில வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

பார்த்திருப்போம் என்ன செய்யப் போகின்றார் என்று...!

---

### டென்மார்க் விபத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பணியில் ஈடுபட்டிருந்த 54 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த விபத்து எப்படி நடந்தது என்பது தெளிவாக தெரியவில்லை எனவும், அதிகாரிகளின் விசாரணைகளுக்காக காத்திருப்பதாகவும் Danish Crownஇன் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இரண்டு மின்தூக்கிகளுக்கு இடையில் நசுக்கப்பட்டதால் அந்த நபர் இறந்தார் என்ற கோட்பாட்டில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

விபத்து குறித்து செவ்வாய்க்கிழமை இரவு எட்டு மணியளவில் 112 என்ற எண்ணின் மூலம் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

நாங்கள் சம்பவ இடத்திற்கு வந்தபோது, அவர் சிக்கியிருப்பதைக் கண்டோம் . சிறிது நேரத்திற்குப் பிறகு, அந்த நபர் உயிரிழந்துவிட்டார் என வைத்தியர் ஒருவர் உறுதி செய்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

---

### 50 கோடி ரூபா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

இலங்கையை மீண்டும் ஒரு தடவை அகௌரவப்படாமல் காப்பாற்ற புது டில்லி முன்வந்திருக்கின்றது எனத் தெரிகின்றது.

இதற்கான சலுகைக்கால அறிவிப்பு இந்த வாரத்தில் புதுடில்லியிலிருந்து வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசியல் தலைவர்கள் சம்பந்தப்படாமல் நேரடியாக இராஜதந்திர மட்டத்தில் பேசப்பட்டு இந்த இணக்க நிலை எட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி, இந்தியாவுக்கு இலங்கை வரும் வாரத்தில் செலுத்த வேண்டிய சுமார் ஐம்பதாயிரம் கோடி ரூபா நிலுவையைச் செலுத்துவதற்கான கால எல்லை நீடிக்கப்பட இருக்கின்றது. இதற்கான அறிவிப்பு புதுடில்லியில் இருந்து இந்த வாரம் கிடைக்கும் எனத் தெரியவருகின்றது.

அரச உயர்மட்ட வட்டாரத்தில் இது தொடர்பாக பேசப்படாவிட்டாலும், இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திரப் பேச்சுகள் மூலம், இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

இந்திய - இலங்கை கடன் உடன்படிக்கையின் கீழ் , இந்திய ரிசர்வ் வங்கிக்கு மொத்தக் கடனாக இலங்கை 2.6 பில்லியன் டொலர்களை இலங்கை செலுத்த வேண்டும்.

இதில் சார்க் ஒப்பந்தம், ஏனைய கடன் வசதிகள் மூலம் செலுத்தப்படும் தொகையை விட 1.7 பில்லியன் டொலர்களை (50 ஆயிரம் கோடி இலங்கை ரூபாவை) இலங்கை வரும் வாரத்தில் இந்தியாவுக்குக் கடனாகச் செலுத்தவேண்டும்.

இந்தத் தொகையை இந்த வாரத்துக்குள் இலங்கை வழங்க வேண்டும்.

இன்றைய அரசியல் சூழலில், அரசோடு பேச்சு நடத்த முடியாத நிலையில், இந்தியாவும் இலங்கையும் இராஜதந்திர மட்டத்தில் பேச்சு நடத்தி, கால நீடிப்புக்கு இணக்கம் கண்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், புதிய பொருளாதார மீட்சி மற்றும் இலங்கையின் புதிய அரசு சர்வதேச நாணய நிதியத்துடன் ஆரம்பித்து வரும் கலந்துரையாடல்களைக் கருத்தில் கொண்டு, இலங்கையின் பொருளாதார ஸ்திரப்படுத்தல் செயல்முறைக்கு ஆதரவளிக்கும் வகையில் பரிமாற்ற ஏற்பாட்டை துரிதமாக நீடித்து உதவ இந்தியா முன்வந்துள்ளது.

இந்த நிலுவையில் உள்ள தொகையானது ஆசிய கிளியரிங் யூனியன் மற்றும் தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்புக்கான பொறிமுறையின் கீழ் சுமார் 2.6 பில்லியன் டொலர் மதிப்பிலான சிறப்பு பரிமாற்ற ஏற்பாடுகளின் கீழும் நிலவுகளை வழங்குவதற்கான உடன்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என உத்தியோகபூர்வ வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

நிலுவையிலுள்ள கொடுப்பனவுகளை வழங்குவதற்கான முடிவை இந்தியத் தரப்பு உத்தியோகபூர்வமற்ற முறையில் இலங்கை அரசுக்குத் தெரிவித்துள்ளது எனவும், இது தொடர்பான உத்தியோகபூர்வ தகவல் உரிய நேரத்தில் அனுப்பப்படும் எனவும் அந்த வட்டாரம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இந்தக் கால அவகாசம் எப்போது வழங்கப்படும் என்று கேட்டபோது, புதுடில்லியில் இருந்து வரவிருக்கும் உத்தியோகபூர்வ தகவல்தொடர்புகளில் அது அறியப்படும் என்றும் அந்த வட்டாரம் கூறியது.

---

### சட்ட விரோதமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்நாட்டில் மாத்திரம் அல்ல வெளிநாடுகளிலும் இவர்கள் இவ்வாறான விதத்தில் சொத்துக்களைச் சேர்த்து வைத்திருந்தால் அவற்றையும் இந்த நிறுவனம் அரசுடமையாக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிறுவனங்கள் வெளிநாடுகள் பலவற்றில் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# எதிர்வரும் மூன்று நாள்களுக்கு டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்



எதிர்வரும் 24, 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவிய மழையுடனான காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிப்புக்குள்ளான பகுதிகளை இலக்காகக் கொண்டு இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கமைய, வெள்ளம் காரணமாக அதிக பாதிப்புகளை எதிர்கொண்ட கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் உள்ள 22 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளை மையப்படுத்தி இந்த டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் அமல்படுத்தப்படுவதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனிடையே, நாடளாவிய ரீதியில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 41 ஆயிரத்து 212 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

# யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் இன்று மழை பெய்யக்கூடும்




யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இன்று மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேல், சபரகமுவ, தென் மற்றும் வடமேல் மாகாணங்களின் சில பகுதிகளில் மழை பெய்யக்கூடும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# செலவை சமர்ப்பிக்காத வேட்பாளர்கள் குறித்து பொலிஸாருக்கு அறிவிப்பதற்குத் தீர்மானம்

ஜனாதிபதி தேர்தல் தொடர்பான தங்களது வருமானம் மற்றும் செலவு அறிக்கையினை சமர்ப்பிக்காத மூன்று வேட்பாளர்கள் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான சட்ட நடவடிக்கையினை காவல்துறையினர் மேற்கொள்வார்கள் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் பிரசார செலவு தொடர்பான அறிக்கைகளைக் கையளிப்பதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு வழங்கியிருந்த கால அவகாசம் கடந்த 13 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட 38 வேட்பாளர்களில் 35 வேட்பாளர்கள் உரிய அறிக்கைகளை வழங்கியிருந்தனர்.

இருப்பினும் பத்தரமுல்ல சீலரதன தேரர், சுயேச்சை வேட்பாளர் சரத் கீர்த்திரத்ன மற்றும் தமிழ் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் ஆகியோர் வருமானம் மற்றும் செலவு அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை.

தேர்தல் சட்டத்தின் படி அறிக்கை கிடைக்கப்பெற்று 10 நாள்களுக்குப் பின்னர் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் எனவும், அறிக்கைகள் வெளியிடப்பட்ட அன்றைய தினமே அதனைச் சமர்ப்பிக்காதவர்கள் தொடர்பில் காவல்துறையினருக்கு அறிவிக்கப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, மூன்று வேட்பாளர்கள் தொடர்பில் எதிர்கால சட்ட நடவடிக்கைகள் சட்டமா அதிபர் ஊடாக பொலிஸாரின் தலையீட்டில் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

# பொதுத் தேர்தல் தொடர்பில் 401 முறைப்பாடுகள் பதிவு




பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய 401 முறைப்பாடுகள் இதுவரையில் கிடைக்கப்பெற்றுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதன்படி, கிடைக்கப்பெற்றுள்ள சகல முறைப்பாடுகளும் தேர்தல் சட்ட மீறலுடன் தொடர்புடையவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தேர்தல் வன்முறை தொடர்பில் இது வரையில் எந்தவித முறைப்பாடுகளும் பதிவாகவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை, பொதுத்தேர்தலுடன் தொடர்புடைய 309 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டுள்ளதுடன், 92 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கம்மன்பில்லவின் அதிரடி

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுக் களால் மேற்கொள்ளப்பட்ட இரண்டு விசாரணை அறிக்கைகளையும் பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில இன்று திங்கட்கிழமை ஊடகங்களுக்கு வெளியிட உள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

"ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர் பான இரண்டு விசாரணை அறிக்கைகளை யும் பகிரங்கப்படுத்தத் தயங்குகின்றார். அந்த அறிக்கைகளை வெளியிடுவதற்காக நான் ஜனாதிபதிக்கு வழங்கிய ஒரு வாரக் காலக் கெடு இன்று காலை 10 மணியுடன் முடி வடைகின்றது. என்னைக் கைது செய்தால் கூட, நவீன தொழில்நுட்பம் ஊடாக அறிக் கைகளை வெளியிடுவதற்குத் தயார்." - என்று அறிவித்திருக்கின்றார் உதய கம்மன் பில.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர் பில் விசாரணைகளை மேற்கொண்ட இரண்டு ஜனாதிபதி ஆணைக்குழுக்களின தும் அறிக்கைகள் கடந்த ஜூன் மாதம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவி டம் கையளிக்கப்பட்டிருந்தன. என்றாலும், அந்த அறிக்கைகளை அவர் பகிரங்கப்படுத்த வில்லை.

அவர் மட்டுமல்லர், இதற்கு முன்னர் இந்த விடயங்களை கையாண்ட ஜனாதிபதிகள் கோட்டாபய ராஜபக்ஷ, மைத்திரிபால சிறி சேன போன்றோர் கூட ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல் தொடர்பான விசாரணை விடயங்களை வெளிப்படையாக மக்கள் முன் வைக்கவில்லை என்ற குற்றச்சாட்டுத் தொடர்ந்து நீடித்து வருகின்றது.

அதிகாரத்திக் இருப்போர் ஏனோ இந்த விவகாரத்தில் பெரும்பாலும் ஒளித்துப் பிடித்து விளையாடுகின்றனர் என்ற கருத்து நிலையே - சந்தேகமே - மக்கள் மத்தியில் உண்டு.

சரியாக ஒரு மாதத்திற்கு முன்னர் ஆட்சிக்கு வந்த அநுரகுமார திஸநாயக்க கூட, இந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தாம் அதிகா ரத்துக்கு வந்தால் ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் விவகாரத்தில் ஒளிக்கப்பட்ட - மறைக்கப்பட்ட - சகல விடயங்களையும் மக்களின் முன் அம்பலப்படுத்தி நீதியை நிலை நாட்டுவார் என்று வாக்குறுதி அளித்து, அதன் மூலம் பெற்ற மக்கள் ஆதரவுடன் தான் ஜனாதிபதியானார்.

ஆயினும் அவரது அரசும் கூட இந்த விடயங்களில் வெளிப்படைத்தன்மை யோடு நடப்பதாக இல்லை என்பதுதான் உதய கம்மன்பில வெளிப்படுத்தும் குற்றச் சாட்டு மூலம் தெரிய வருகின்றது.

இந்த விடயத்தில் உண்மையை அம் பலப்படுத்துவோம் என்று கூறி அதிகா ரத்துக்கு வந்த அநுரகுமார திஸநாயக்க வின் ஆட்சி பீடம், தான் வைதிருக்கும் அந்த அறிக்கைகளை வெளியிடுவதற்குப் பதிலாக - அதை மறைத்து வைத்துக் கொண்டு, அரசை மீறி அதைப் பகிரங் கப்படுத்தப் போகிறார் என மிரட்டி வரும் உதய கம்மன்பில மீது நடவடிக்கை எடுப் பது குறித்துத் தீவிரமாக ஆராய்கின் றது எனக் கூறப்படுகின்றது.

அந்த வகையில் பார்த்தால் அநுரகுமார திஸநாயக்காவின்அரசும்கூடஇந்தவிவகா ரத்தில் முன்னைய ஜனாதிபதிகளின் அரசுகள் போல விடயங்களை அமுக்கி, ஒளித்துப் பிடித்து விளையாடவே முயல் கின்றது என்றே தோன்றுகின்றது.

எச்.ஐ. இமாம் மற்றும் ஏ.என. ஜே. தி அல் விஸ் ஆகிய ஆணைக்குழுக்களால் விசார ணைக்கு உட்படுத்தப்பட்ட அறிக்கை களே இவ்வாறு பகிரங்கப்படுத்தப்பட உள்ளன.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பல வேறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி யிருந்த அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே, இந்த ஆணைக்குழுகளின் விசாரணை அறிக்கைகளில் குற்றமற்றவ ராக தெரிவிக்கப்பட்டுள்ளார் எனவும், குற் றப் புலனாய்வு திணைக்களத்தின் முன் னாள் பணிப்பாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமாகப் பணியாற்றிய ஷானி அபேசேகர, இந்த அறிக்கைகளில் குற் றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ளார் என வும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்- துக்கு ஆதரவு வழங்கிய முக்கிய நபராக ஷானி அபேசேகர இருக்கின்றமையுடன், பொலிஸ் சேவையில் அவர் மீண்டும் இணைந்துகொள்வதற்கான சந்தர்ப்பமும் இந்த அரசாங்கத்தால் ஏற்படுத்திக்கொ- டுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை தேர்தல் நெருங்கி யுள்ள தருணத்தில் வெளியிட்டால் இந்த ஆட்சிப் பீடம் அதனால் பல்வேறு நெருக்கடிகள், விமர்சனங்களை எதிர் கொள்ள நேரிடும் எனக் கூறப்படு கின்றது.

இந்த அரசுக்கு உதய கம்மன்பில்ல கொடுத்த ஒரு வார காலக்கெடு இன்று காலை பத்து மணிக்கு காலாவதியாகும் போது உண்மை தெரிந்து விடும்.

# இந்திய வான்பரப்பு பாதுகாப்பாக உள்ளது!

## சிவில் விமான பாதுகாப்புப் பிரிவு அறிவிப்பு






இந்திய வான்பரப்பு பாதுகாப்பாக உள்ளதாக இந்திய சிவில் விமான பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

தேவையற்ற அச்சங்களை கொண்டிராமல் பயணிகள் தமது விமானப் பயணங்களை மேற்கொள்ள முடியுமென இந்திய சிவில் விமான பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் சுல்பிகர் ஹசன் தெரிவித்துள்ளார்.

விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல்கள் விடுக்கப்பட்டதையடுத்து விமான நிறுவனங்களின் பிரதானிகளுடன் அவசர கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் மாத்திரம் இந்தியாவில் 30 விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டிருந்தது.

இந்திய விமானங்களுக்கு 6 நாள்களுக்குள் 70 வெடிகுண்டு மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனிடையே, விமானங்களுக்கு போலி வெடிகுண்டு அச்சுறுத்தல் விடுப்போருக்கு ஆயுள்தண்டனை விதிப்பது தொடர்பில் இந்திய மத்திய அரசு தீவிர கவனம் செலுத்தியுள்ளது.

இதேவேளை, இந்தியா முழுவதும் தற்போது சேவையில் உள்ள பல விமானங்களுக்கு நேற்று மீண்டும் வெடிகுண்டு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் பல விமானங்கள் தரையிறக்கப்பட்டன என இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விஸ்தாரா மற்றும் ஆகாசா விமான சேவைக்கு சொந்தமான விமானங்களுக்கே இந்த வெடிகுண்டு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மகாராஷ்டிர சட்டப்பேரவைத் தேர்தல்: முதல் வேட்பாளர் பட்டியல் வெளியீடு



மகாராஷ்டிர சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட உள்ள 99 வேட்பாளர்கள் அடங்கிய முதல் பட்டியலை பா.ஜ.க. வெளியிட்டுள்ளது.

துணைமுதல்வர் தேவிந்திர பட்நாவிஸ் தனது கோட்டையான தென்மேற்கு நாக்பூரில் போட்டியிடுகிறார்.

மகாராஷ்டிர பாஜக தலைவர் சந்திரசேகர் பவன்குலே கம்தி தொகுதியிலும், பா.ஜ.க. தலைவரும் மாநிலங்களவை உறுப்பினருமான அசோக் சவானின் மகள், ஸ்ரீஜெய சவான் போகர் தொகுதியிலும் போட்டியிடுகிறார்கள். மும்பை பா.ஜ.க. தலைவர் ஆஷிஸ் சேலார் மேற்கு வந்த்ரே தொகுதியிலும், கட்சியின் மூத்த தலைவரும், மக்களவை உறுப்பினருமான நாராயண் ரானேவின் மகன் நிதிஸ் ரானே தான் தற்போது எம்.எல்.ஏவாக இருக்கும் கன்கவ்லியில் போட்டியிருகிறார்.

மாராஷ்டிராவில் உள்ள 288 தொகுதிகளுக்கு நவம்பர் 20 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது. வாக்குகள் நவம்பர் 23 ஆம் திகதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன.

மாநிலத்தில் பாரதிய ஜனதா கட்சி, ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவசேனா, அஜித் பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் கட்சி ஆகியவை மகாயுதி கூட்டணியில் போட்டியிடுகின்றன. இந்தக் கூட்டணியில் கட்சிகளுக்கு இடையேயான தொகுதிப் பங்கீடு இன்னும் முடிவாகவில்லை. இந்தத் தேர்தலில் பா.ஜ.க. 150 தொதிகளில் போட்டியிடுவதை நோக்கமாக கொண்டுள்ளது.






# ரஷ்யா - உக்ரைன் இடையில் 190 கைதிகள் பரிமாற்றம்

ரஷ்யா – உக்ரைன் இடையில் சுமார் 3 ஆண்டுகளாக நீடித்து வரும் மோதலின் முக்கிய திருப்பமாக இருநாடுகளும் 190 போர்க் கைதிகளை பரிமாறிக் கொண்டுள்ளன.

இந்த விடயம் ரஷ்ய பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி தொடங்கிய இந்த போர் தொடர்ந்து வருகிறது. இதனால் இரு தரப்பிலும் இழப்புகள் தொடர்ந்து அதிகரித்தே வருகிறது.

இரு நாடுகளுக்கிடையேயான போரை முடிவுக்கு கொண்டு வர மற்ற நாடுகள் எடுத்து வரும் முயற்சிகளும் தோல்வியிலேயே முடிகின்றன.

இந்த நிலையில் ரஷ்யா, உக்ரைன் இடையே சிறைப்பிடிக்கப்பட்டவர்களை விடுவிப்பது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வந்தது. இதனை தொடர்ந்து தற்போது ரஷ்யா தரப்பில் பிடித்து வைக்கப்பட்டு இருந்த 95 உக்ரைன் வீரர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோல் ரஷ்ய வீரர்கள் 95 பேரையும் உக்ரைன் விடுவித்து உள்ளது. விடுவிக்கப்பட்ட போர்க்கைதிகள் மகிழ்ச்சியாக சொந்த நாடுகளுக்கு திரும்பினர்.

இந்த நடவடிக்கையால் ரஷ்யா – உக்ரைன் போர் விரைவில் முடிவுக்கு வரலாம் என அரசியல் ஆய்வாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்

ஏற்கனவே, ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே 203 பேர் விடுவிக்கப்பட்டு இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.





# இந்து - பசுபிக் பாதுகாப்பிற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்

## ஜி 7 நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் தெரிவிப்பு

இந்து – பசுபிக் பாதுகாப்பிற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஜி 7 நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்தாலியின் மிலானோ நகரில் நடைபெற்ற ஜி 7 முதலாவது அமைச்சரவை கூட்டத்தின் போதே அவர்கள் இதனை கூறியுள்ளனர்.

சீனாவின் இராணுவ நடவடிக்கைகளுக்கு மத்தியில் இந்து – பசுபிக் பிராந்தியத்தின் பாதுகாப்பு தொடர்பில் இதன்போது கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.



# இன்றைய ராசி பலன்கள் -21.10.2024




இன்றைய நாள் சற்று மந்தமாக காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மன நிம்மதி மற்றும் ஆறுதலை அளிக்கும்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. அதன் மூலம் சுமாரான பலன்களே கிடைக்கும். கடின உழைப்பின் மூலம் மட்டுமே வெற்றி கிட்டும்.

மகிழ்ச்சியாக இருக்க அகந்தை உணர்வை தவிர்க்கவும். உங்கள் துணையுடன் மனம் திறந்து பழகவும்.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக கூடுதல் செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு மிகுந்த கவலையை அளிக்கும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தலை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




நீங்கள் தைரியமாக சரியான பாதையில் செயல்பட வேண்டியது அவசியம். உங்கள் பயத்தை ஒதுக்கித் தள்ளி நம்பிக்கையுடன் செயல்படுங்கள்.

உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்களுக்கு பொறுமை அவசியம். நீங்கள் யோசித்து சிறப்பாக செயல்பட வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும்போது இணக்கம் குறைந்து காணப்படும். முதல் முறை பேசிக்கொள்வது போல பேசுவீர்கள்.

இன்று கூடுதல் செலவுகள் ஏற்படும் என்பதால் உங்களுக்கு கவலை ஏற்படும். இது தவிர்க்க முடியாதது. எனவிய கவனமாக இருக்கவும்.

கண்களில் எரிச்சல் பாதிப்பை ஏற்படுத்தும். மருத்துவம் பார்த்துக் கொள்வது நல்லது.




நீங்கள் சுய முன்னேற்றப்பாதையில் செல்வீர்கள். நீங்கள் இன்று சில லட்சியங்களை அடைய வேண்டும் என்று உங்களை தயார் படுத்திக் கொண்டு இந்த நாளை சுமூகமாக்குவீர்கள்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் பணியில் வெற்றி பெற உங்கள் மனதை செலுத்துவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நட்பாகவும் அன்பாகவும் நடந்து கொள்வீர்கள். பயணத்தின் போது இருவரும் உற்சாகமான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

கடின உழைப்பின் மூலம் மட்டுமே வெற்றி கிடைக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும். அமைதியான அணுகுமுறை மூலம் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.




இன்று பண வரவு காணப்படலாம். இன்று உங்கள் செயல்களை முடிப்பதற்கு திட்டமிடுவீர்கள். நீண்ட கால திட்டங்களுக்கு இந்த நாள் உகந்த நாள்.

உங்கள் பணியில் புதிய வாய்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. கடின உழைப்பு மற்றும் சிறந்த முயற்சி மூலம் நீங்கள் சிறந்த நிலைக்கு வருவீர்கள். இதன் மூலம் உங்களுக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் வெளிப்படையாக பழகுவீர்கள். இதனால் இருவருக்கிடையே நல்லிணக்கம் வலுப்படும்.

உங்கள் நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள நோக்கத்திற்கு செலவு செய்வீர்கள்.

உடல் ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும். திருப்தி உணர்வு காணப்படும். அதனால் ஆரோக்கியமும் சிறப்பாக இருக்கும்.




கையிலுள்ள பணிகளை முடிப்பதற்கு நீங்கள் மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும்.பொதுவில் இன்றைய நாள் மிகவும் கடினமாக இருக்கும்.

கவனக் குறைவு காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை திறமையாக ஆற்ற ஆன்மீக ஈடுபாடு சிறந்தது.

உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்குமிடையே தன்னம்பிக்கை நிலை குறையும்.

நிதி நிலை வளர்ச்சி சற்று குறைவாக இருக்கும். உங்கள் செலவைக் குறைக்க சிறந்த திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும்.

உடல் ஆரோக்கியத்தில் சிறிது பாதிப்பு இருக்கும். உங்களுக்கு முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்றைய நாள் முன்னேற்றத்திற்கு உகந்த நாள் அல்ல. உங்கள் அணுகுமுறையில் யதார்த்தம் தேவை.

உங்கள்பணிகளைமேற்கொள்ள பொறுமை அவசியம்.பணிச்சுமையும் அதிகமாக காணப்படும்.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்டு உங்கள் துணையுடன் சண்டையிடுவீர்கள்.உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இத்தகைய போக்கை தவிர்க்க வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அதிகரிக்கும் செலவுகள் கவலையை அளிக்கும்.

தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியாக கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது.




இன்று இனிமையான தருணங்கள் காத்திருக்கின்றன. பொழுதுபோக்கு நிகழ்ச்சியில் பங்கு பெறுவதன் மூலம் நீங்கள் பதட்டத்திலிருந்து விடுபடலாம்.

உங்கள் பணியைப் பொறுத்த வரை சுய வளர்ச்சிக்கு உற்சாகமான நேரம். புதிய முயற்சிகளும் சாத்தியம்.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமணத்திற்கு செல்வீர்கள். இருவரும் உற்சாகமாக நேரத்தை கழிப்பீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

சிறந்த மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் திருப்தியாக உணர்வீர்கள்.




இன்றைய நாள் மிகவும் அற்புதமான நாள். இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் உறுதியும் காணப்படும்.

பணியில் உங்கள் முயற்சிக்கு வெற்றி கிட்டும். நீங்கள் தன்னம்பிக்கையுடன் பணிகளை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்சிகள் நடைபெறக் காண்பீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். நிதியில் ஸ்திரத்தன்மை பெறுவீர்கள்.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. உறுதியான போக்கு காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -21.10.2024




புத்திசாலித்தனம் மற்றும் சம நிலை அணுகுமுறை வெற்றிக்கு வழிகாட்டும். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பணியில் மிதமான முன்னேற்றம் காணப்படும். நேரப்படி பணகளை செய்வதன் மூலம் திறமையாக பணியாற்ற முடியும்.

நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சுமாராக இருக்கும். பணத்தை கவனமாகச் செலவு செய்யவும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. அமைதியாக இருந்து பதட்டத்தை தவிர்ப்பதன் மூலம் ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.




உங்கள் விருப்பங்கள் இன்று நிறைவேறும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

சக பணியாளர்கள் உதவிகரமாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். பணியைப் பொறுத்தவரை நீங்கள் திறம்பட பணியாற்றி உங்கள் செயல்திறனை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

பணம் அதிக அளவில் காணப்படும். சுப நிகழ்சிக்காக பணத்தை பயன் படுத்தலாம்.

நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




நீங்கள் உற்சாகமாகவும் ஆற்றலுடனும் இருப்பது நல்லது.பலன்களை எதிர்பாராது செயால்பட்டால் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் உங்களுக்கு உகந்ததாக இருக்காது. அதிகப் பணிகள் மற்றும் அசௌகரியங்கள் உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். சிறிய விஷயத்திற்கு வருத்தப் படுவது உறவை பாதிக்கும்.

உங்கள் வீட்டின் முன்னேற்றத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் அதிக செலவு ஏற்படும். நெருங்கிய சொந்தங்களுக்காக பணம் செலவு செய்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது சிறந்தது. மகிழ்ச்சியாக இருப்பதும் விஷயங்களை லேசாக எடுத்துக் கொள்வதும் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்திருக்கும்.




பொதுவில் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். உங்களுக்கு பயன் தரும் முடிவுகளை நீங்கள் இன்று எடுக்கலாம்.

நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்து அதனை அடைவீர்கள். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு கிடைப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் அன்பாக மகிழ்ச்சியாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு வளரும்.

உங்கள் கையிலுள்ள பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். அதில் சிறிது பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.

